உ

# பாராட்டு விழா மலர்



திரு. க. க. வேலாயுதபிள்ளை

கிராமசேவை அலுவலர், தெல்லிப்பழை வடமேற்கு, இளவாலை

உ

# பாராட்டு விழாக்குழு வாழ்த்துகிறது.

## கிராமசேவை அலுவலர் திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்களே!

## நாம் உங்களைப் பாராட்டுகிறோம்; பாராட்டும்போது நினைவூட்டுகிறோம்..

ஓடும் மாட்டுக்கு ஊசியாற் குத்துவதுண்டு. குத்துவது மாட்டின் மீது உள்ள கோபத்தாலல்ல; அது இன்னும் விரைவாக ஒடவேண்டு மென்பதற் காக.

உங்கள்சேவையைக் குறைகூறுவோருமுண்டு. உங்கள் சேவை சிறப்ப டையவேண்டு மென்பதற்காக அவர்கள் குறையும் கூறவேண்டும்.

பாராட்டுதல் என்பது உளவியல் ரீதியான ஊக்குவிப்பு எமது கிராமமக் கள் முன்புமொருமுறை உங்களைப் பாராட்டினர்; அப்பாராட்டு பயன் தந்தது.

'திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு' என்பது ஔவையின் அறிவுரை. அதன்படி முன்பொருமுறை கடல் கடந்து சென்றீர்கள். உங்களால் அங் கிருந்து பணிபுரிந்து பணந்தேட முடியவில்லை. அன்புப் பிணைப்பிழுக்க அங் கிருப்பதெப்படி? அவசரம் அவசரமாக எம்மைநாடி ஓடி வந்தீர்கள்.

இப்போது, உங்கள் வீட்டிலிருந்து எம்மூருக்கு மிதிவண்டியில் வருகிறீர் கள் நீங்கள் வரும் வேகம் போதாது. இன்னும் விரைந்து வரவேண்டும். அதற்காக இருசில்லு மோட்டார் விசைவண்டி தருகின்றோம். விரைந்துவாருங் கள். உங்கள் சேவையை இன்னுஞ் சிறப்பாகவும் விரைவாகவுஞ் செய்யுங் கள்.

நாம் செயற்படுகின்றோம். எம்மைச் செயற்படுத்துவது இறைவன்செயல். அவன் உங்களையும் எங்களையும் ஆட்டுகின்றான். நாம் ஆடுகின்றோம். ஆட்டு பவன் உங்களை நன்றாக ஆட்டுவானாக; செயற்றிறனையும் செல்வத்தையும் வளமான வாழ்வையும் தருவானாக. அவனை வாழ்த்தி வணங்குவோம்.

தெல்லிப்பளை வடமேற்கு,<br>இளவாலை. 29-06-1988

பாராட்டு விழாக்குழுவுக்காக<br>மலராசிரியர்

உ

தெல்லிப்பழை வடமேற்கு (107)

கிராமசேவை அலுவலர் திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்களின்

# பாராட்டு விழா மலர்

இம்மலர்
மற்றுமோர் நினைவுச் சின்னம்

**பாரட்டு விழாக் குழு**

தெல்லிப்பழை வடமேற்கு,
இளவாலை.

**1988-06-29**

௳

# பாராட்டு விழாக் குழு

| | |
|---|---|
| தலைவர் : | திரு. ஆ. நடராசா |
| செயலாளர் : | திரு. சி. சுமந்திரன் |
| பொருளாளர் : | திரு. சு. மகேந்திரன் |
| குழு உறுப்பினர்: | திருமதி வேதநாயகி அப்புத்துரை |
| | திரு. சு. செல்லத்துரை |
| | ,, சி. மகேந்திரராசா |
| | ,, இ. இராமச்சந்திரன் |
| | ,, வ. சிதம்பரநாதன் |
| | ,, சி. யாக்கோமுத்து |
| | ,, அ. ஜேம்ஸ் ஜெறுட் யேசுதாசன் |
| | ,, அ. மே. யோசேப்பு |
| | ,, நா. இராசரத்தினம் |
| | ,, ஏ. ஜே. அன்ரனி அன்பழகன் |
| | ,, க. சிவசுப்பிரமணியம் |
| | ,, பெ. வடிவேலு |
| | ,, க. வசீகரன் |
| | ,, செ. நாவரசன் |
| | ,, வே. சண்முகநாதன் |

# அறிமுகம்

**1983** ஆம் ஆண்டு ஆடிக்கலவரம் ஆரம்பமானதிலிருந்து இன்றுவரை எமது மக்கள் நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்கிறார்கள்.

இக்கலவரத்தால் வெளியிடங்களில் வசித்தவர்களைத் தவிர, உள்ளூரில் வாழ்ந்தவர்கள் பாரிய பாதிப்புக்கு ஆளாகவில்லையானாலும் வலித்தூண்டல் மக்கள் மாத்திரம் தம் வதிவிடங்களை விட்டு வெளியேறி, யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்து, அங்கு இரண்டு வார காலம் தங்கியிருந்தனர்.

அப்போதும் எமது பகுதி கிராம சேவையாளராகக் கடமையாற்றிய திரு. க. க. வேலாயுதபிள்ளை ஒரு கடமை வீரனாகவும், கிராமமுன்னேற்றத்தில் மக்களோடு ஒத்துழைப்பவராகவும் கருதப்பட்டார்.

காங்கேசன்துறையிலிருந்து சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலால் மாவிட்டபுரம் கலட்டியைச் சேர்ந்த மக்கள் தம் வீடுகளை விட்டு வெளியேறி யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் 1987-05-03ல் தஞ்சமடைந்து 1987-06-07 வரை அங்கேயே தங்கினர். அப்போது பிரசைகள் குழுவோடு இணைந்தும் தனித்தும் அவர்களுக்கு உதவும் பணியில் திரு. வேலாயுதபிள்ளை ஈடுபட்டார்.

1987-05-27ல் எமது கிராமசேவகர் பிரிவின் ஒரு பகுதியான வலித்தூண்டலில் வாழும் மக்களே இடம்பெயர்ந்து சென்று வாழவேண்டிய நிலைக்கு ஆளானார்கள். அப்போதும் திரு; வேலாயுதபிள்ளை அவர்களுக்கு உதவினார்.

தனக்கென ஒரு அலுவலகம் இருந்தபோதிலும் அங்கு வசிக்கக்கூடிய வசதியின்மையால், இராணுவ நடவடிக்கை காரணமாக, தெல்லிப்பழையிலுள்ள தனது வீட்டை விட்டு வெளியேறிய திரு. வேலாயுதபிள்ளை இப்பகுதியில் அகதியாக வாழவேண்டிய நிலைக்கு ஆளானார்.

1987-06-07 அன்று எமது கிராம சேவகர் பிரிவிலுள்ள சில இடங்கள்மீது கடுமையான முப்படைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இராணுவம் எமது கிராமத்துள் நுழைந்தது. வலித்தூண்டல், கீரிமலைப் பகுதியிலுள்ள 12 வீடுகளை இராணுவத்தினர் ''புல்டோச'ரினால் இடித்துத் தரைமட்டமாக்கினர்.

இங்கு வாழும் மக்களால் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களைத் தவிர ஏனையோர் இடம்பெயர்ந்து சென்றனர்;

திரு. வேலாயுதபிள்ளை தனது மனைவி மக்களைப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பிவிட்டு இங்கேயே தங்கினார்; தமது சொந்த வீட்டைவிட்டு அகதியாக வெளியேறியவர், தாம் கடமை புரியும் இடத்தை விட்டு வெளியேறவேண்டிய நேரத்தில் வெளியேறவில்லை. மண்ணுக்குரியவர்கள் வீடுகளைவிட்டு வெளியேறிவிட, அவர்களுக்குச் சேவகஞ் செய்ய வந்தவர் தாம் சேவை செய்யும் இடத்தைவிட்டுவெளியேறவில்லை;

அவர் இங்கே தங்கியிருந்து மக்களுக்கு வழங்கவேண்டிய நிவாரணங்களை வழங்குவதில் ஈடுபட்டார். இந்நிகழ்ச்சி அவரின் சேவையின்சிகரம்;

1987-10-10ல் இந்திய இராணுவம் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டது.

இரவுபகலென்ற பேதமின்றி காலவரையறை அற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது: அப்போது அவர் தெல்லிப்பளையிலுள்ள தமது வீட்டில் வசித்த போதிலும் தெல்லிப்பளை வடமேற்குக்கு வந்துபோகாத நாளில்லை. இந்நிகழ்ச்சிகளே அவருக்குப் பாராட்டுவிழா எடுக்கத் தூண்டிய முக்கிய நிகழ்ச்சிகள்:

அவருக்குப் பாராட்டுவிழாவெடுக்கக் கருதிய மக்கள், ஒரு பாராட்டுவிழாக் குழுவை அமைத்தனர்: அக்குழு இன்றைய விழாவை எடுக்கிறது: இவ்விழாவில் இந்த மலர் மலர்கிறது: இம்மலர் நன்றி மணக்கும் நறுமலர்; வர்த்தக வாசனை வீசாத புதுமலர்: மக்கள் செலுத்திய அன்புக் காணிக்கையால் மாத்திரம் மலர்த்தப்படும் வாடாமலர்.

இம்மலர் மலர்வதற்கு வாழ்த்துச் செய்திகளையும், ஆக்கங்களையும் அளித்தவர்களுக்கும், பாராட்டு விழாக் குழுத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் இணைந்து மலர்க் குழுவாக இயங்கிய யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு. சு. செல்லத்துரை அவர்களுக்கும் மலர் மலரவும் விழாச் சிறப்புற நடைபெறவும் இரவு பகலாக உழைத்த திரு. இ. இராமச்சந்திரனுக்கும், பாராட்டு விழாக் குழுவினருக்கும், இந்நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறத் தோன்றாத் துணையாக இருந்தவர்கள் அனைவருக்கும், நிதியுதவியோருக்கும், இம்மலரை அழகாக அச்சிட்டுதவிய தெல்லிப்பளை குகன் அச்சகத்தாருக்கும் மலர்க்குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

வணக்கம்

மலராசிரியர்

நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீனகர்த்தா

## பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

''வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க''...

என ஆரம்பிக்கிறது கந்தபுராண வாழ்த்து:

நாட்டிலே நல்ல அரசு நடந்தாற்றான் பருவ மழை பெய்யும்; பயிர் வளரும்; விளைவு பெருகும்; அதனாற் பெற்றசெல்வத்தை அனுபவிக்க வேண்டியவர் அனுபவிப்பர்; மக்கள் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ்வர்: மற்றைய உயிரினங்களும் வாழும்: அதனாலேதான் ''மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்று கூறப்படுகிறது.

வேதநெறி பிறழாச் சீரிய வாழ்க்கை முறையும், தரும வழியினாலே சம்பாதிக்கப்படுகின்ற செல்வமும் வேத வேள்வி முதலியவற்றைச் செய்வதற்கு அடிப்படையானவை: இந்த அடிப்படையிலிருந்துதான் மேன்மைகொள் சைவநீதி முளை கொள்ளுகின்றது:

சைவம் வளரவேண்டுமானால் சைவநீதி நிலை பெறவேண்டும். நீதிநிலைபெறுவதற்கு நிருவாகம் சீராக நடைபெறவேண்டும். எமது நாட்டு நிருவாக முறையில் மக்களோடு தொடர்பு கொண்டு சீரான நிருவாகத்தைச் செய்வதற்கு வலுவான தளமமைக்கவேண்டிய பொறுப்பு கிராம சேவகர்களுடையது

அப்பொறுப்பை உணர்ந்து பணிபுரிவதுடன், மக்கள் நலனுக்காகவும் உழைக்கும் ஒருவர் திரு. க. ச. வேலாயுதபிள்ளை. அவர் பெறவேண்டிய பேறனைத்தும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம்வல்ல நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

நகுலேஸ்வர ஆதீனம், கீரிமலை.

கு. நகுலேஸ்வரக்குருக்கள்

மாரீசன்கூடல் பங்குத் தந்தை

## அருள்திரு ஜே. ஏ. யேசுதாஸ் அடிகளார் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மனித மாண்புகள் மழுங்கடிக்கப்படுகின்ற இக்காலத்தில், மனித மாண்பைக் காப்பாற்ற முயற்சிக்கின்ற ஒருசிலரில். தன்னையும் அவர்களோடு அடையாளங்காட்டிக் கொண்டிருக்கின்ற திரு. க. க: வேலாயுதபிள்ளையின் சேவையை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

'உன்னைப்போல் உன் அயலானையும் அன்பு செய்' என்ற கொள்கைக்கிணங்க தன் வாழ்வை மற்றவர்களுக்காக அர்ப்பணித்து வாழ்கின்ற இவரின் சேவை எம் மக்களுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமே;

இச்சேவை தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கவும், அவரது வாழ்வு சிறப்புறவும் ஆசித்து நிற்கிறேன்.

மாரீசன்கூடல்,
இளவாலை;

ஜே. ஏ. யேசுதாஸ்
பங்குத்தந்தை

உதவி அரச அதிபர் (கச்சேரி)

## செல்வி மைதிலி சோமசுந்தரம் S. L. A. S. அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை வடமேற்குக் கிராமசேவை அலுவலர் பிரிவில், திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்கள் பத்தாண்டு காலம் சேவையாற்றியமையினைப் பாராட்டு முகமாக வெளியிடப்படும் மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்கள் சமுதாய நலனில் அக்கறை கொண்ட ஓர் அரசசேவை அலுவலராவர். எடுத்த கருமமொன்றினைச் சிறப்பாகச் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆர்வமும், அதற்கேற்ற முயற்சியுமுடையவர் எந்த ஒருவிடயத்தினையும் சிந்தனைத் தெளிவுடன் அணுகுபவர். மக்கள் இன்னல்கட்குள்ளாகும்போது அரச சேவை அலுவலரின் பணியும் பொறுப்பும் அதிகமாகின்றன என்பதை உணர்ந்தவர்.

இத்தகையவரின் சேவையினை நீண்ட காலத்திற்குத் தமிழ்ப்பகுதிக் கிராமங்கள் பெறல்வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உதவி அரச அதிபர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்;

மைதிலி சோமசுந்தரம்

உ

### வலி வடக்கு, தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர்

## திரு. வை. இராசையா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பளை வடமேற்குப் பகுதியின் கிராமசேவை அலுவலர் திரு: க: க. வேலாயுதபிள்ளை அவர்களின் நற்பணிகளைப் பாராட்டி அவரது பத்தாண்டு சேவைப் பூர்த்தியினைக் கொண்டாடுமுகமாக எடுக்கும் பாராட்டுவிழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்:

1971ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நான் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டை வழங்கற் பிரிவுக்கு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நிருவாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டேன்: அக்காலப் பகுதியில் திரு. வேலாயுதபிள்ளையும் என்னுடன் தொடர்பு கொண்டிருந்தார்: சகல கிராமசேவை அலுவலர்களும் உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர்களாகப் பணியாற்றினார்கள்; பணியாற்றியும் வருகின்றனர். திறம்படத் தமது பணிகளை ஆற்றியவர்களுள் இவரும் ஒருவராக விளங்கினார் என்று கூறினால் அது மிகையாகாது.

1986-ம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிருவாக அதிகாரியாகப் பணியாற்றி வரும் வேளையில் இப்பிரிவின் முழுப் பொறுப்பும் யாழ். அரசாங்க அதிபரினால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது: எனக்கு திரு. வேலாயுதபிள்ளையுடன் முன்பிருந்த தொடர்பு இங்கு மீண்டும் ஆரம்பமானது.

இவரது பணிகள் மிகவும் சிறப்பாக அமைந்தன. கடமை, கண்ணியம்' கட்டுப்பாடு ஆகியவற்றுடன் குறிப்பறிந்து செயலாற்றி மேலதிகாரிகளுடன் சாதுரியமாகப் பழகித் தம் பணிகளை மேற்கொண்டார். எல்லோராலும் போற்றப்படுகின்ற குணாதிசயங்கள் இவரிடம் நிறைய உண்டு' மக்கள் இவர்மீது கொண்டுள்ள நன்மதிப்பின் காரணமாக இன்று இவ்விழா எடுக்கப்படுகின்றது.

இறைவன் திருவருளால் இந்த நல்லெண்ணத் தொடர்புகள் நீடிக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்: இவரது குடும்பச் சிறப்புக்களனைத்திற்கும் ஆண்டவனின் ஆசீர்வாதத்தை உளமார்ந்த அன்புடன் வேண்டி அவர் மேலும் சிறப்புக்களைப் பெற்று வாழவேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்,

வணக்கம்

வை. இராசையா
உதவி அராங்க அதிபர்
வலி-வடக்கு தெல்லிப்பழை

29-06-1988

உ

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்

# செல்வி சாந்தி சுப்பிரமணியம் (S. L. A. S) அவர்களின் வாழ்த்துச் செய்தி

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

என்னும் வள்ளுவர் வாக்கு, கிராமசேவையாளர் திரு. க. க. வேலாயுதபிள்ளையின் வாழ்க்கைக்கு வகுக்கப்பட்ட இலக்கணம் போன்றது.

நிறைந்த அறிவு அளப்பரும் ஆற்றல், உயர்ந்த கொள்கை, சீரிய சிந்தனை உத்தம குணம், பெருமை சிறுமை பாராட்டாப் பண்பு, கடமையுணர்வு, கண்ணிய மான பேச்சு, கட்டுப்பாடான போக்கு, நெஞ்சில் உரம், நேர்மைத்திறம், சேவை மனப்பாங்கு ஆகிய அனைத்தும் ஒருங்கு எடுத்தாலனையவர் அவர்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனக் கருதி, 'கடமையைச் செய் பலனை எதிர்பாரதே' என்னும் கிருஷ்ண பரமாத்மாவின் வாக்கினைத் தாரக மந்திர மாகக்கொண்டு, 1987 யூன் மாதத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போதும், அதன்பின்பும் தெல்லிப்பளை வடமேற்கில் வாழும் மக்களோடு தானும் ஒருவராக வாழ்ந்து அல்லலுற்ற மக்களுக்கு ஆவன புரிந்து, ஆறுதல் கூறி அவராற் றிய பணியை வார்த்தைகளில் வடிக்க முடியாது.

நிருவாக அதிகாரப் பரவலாக்கல் கீழ்மட்டம் வரை செல்லும்பொழுது, கிராமத்தின் அதிகாரியாக இருப்பவரின் செயற்றிறன், மேலதிகாரிகளின் பணியை இலகுவாக்குகிறது: இவ்வகையில் திரு. வேலாயுதபிள்ளையின் சேவை போற்றதற்குரி யது: அதனால் அவர் மேலதிகாரிகளினால் நன்கு மதிக்கப்படுகிறார்:

கிராமத்தின் அபிவிருத்திக்கு, கலை, கலாச்சார வளர்ச்சிக்கு, சமாதானத்தை யும் நீதியையும் நிலை நாட்டுவதற்கு அவர் செய்த சேவைகள் அளப்பில:

உத்தியோகத்துக்காக நேர்முகப் பரீட்சைக்குச் செல்வோர் எவராயினும் அவ ரிடஞ் சான்றிதழ் பெறச் சென்றால், அவரைச் சான்றிதழிற் கையொப்பம் பெறுவதற் காக உதவி அரசாங்க அதிபரிடம் அனுப்பாமல், தாமே சென்று உதவியரசாங்க அதி பரின் கையொப்பத்தைப் பெற்றுச் சான்றிதழை வழங்குவதுடன், வாழ்த்துங்கூறி அனுப்புவது அவரது வழக்கம்: அவரது வாழ்த்து வழுவாது பயன் கொடுக்கும். அவ்விதம் பயன் பெற்றவர்களில் நானும் ஒருவர்.

"பயன்தூக்கார் செய்தஉதவி நயன் தூக்கின்
நன்மை கடலின் பெரிது" இக்காரணத்தால் அவர் இங்கிருந்து சேவை செய்யுங் காலத்திலேயே பாராட்டுப் பெறுகிறார்.

அவரும் அவர் குடும்பமும் சீருஞ் சிறப்பும் பெற்று, பல்லாண்டு காலம் பணி புரிந்து வாழவேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்; ஒல்லுடை ஞான வைரவேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

உதவியரசாங்க அதிபர்
சண்டிலிப்பாய்

சாந்தி சுப்பிரமணியம்

## சேவைக்கெனப் பிறந்தோய்

செய்யும் தொழிலே தெய்வமென் றெண்ணி
வையமேற் பணிசெயும் பண்பினை வாழிய!
சேவைக் கென்றே பிறந்தே என்றும்
சேவைகள் சிறப்புறப் புரிவோய் வாழிய!
காட்சிக் கெளியனைக் கனிநிகர் சொல்லனை
மாட்சிக் குரியனை வாழும் நின்னுளம்
அன்புளம் உதவும் பண்புளம், அதனால்
எப்பகு திக்கண் பணிபுரிந் திடினும்
அப்பகு தியினர் தம்நலனே கருதுவை!
கல்வியால் கலையால் பொருளால் பிறவால்
அவ்வூர் மக்கள் சிறத்தல் வேண்டி
ஆலோசனைகள் வழங்குவை நீயே!
ஏழையர் தேவை நீயே உணர்ந்து
ஏழையர்க் குதவும் இயல்பினை வாழிய!
மக்கள்பால் ஐக்கியம் மலர்தல் வேண்டி
அல்லும் பகலும் உழைப்போய் நீயே!
நல்லவன் என்றே யாவரும் போற்ற
வாழ்தல் என்பது தனிப்பெருங் கலையே
அப்பெருங் கலையில் வல்லோய் வாழிய
நின் வருகைப்பின் கிராம சேவகர்ப்
பதவி யென்பது மதிப்பினில் உயர்ந்தது
சீர் வேலாயுத பிள்ளையே நின்பெயர்
தேனென நமக்கெலாம் இனிய தாகுமே!

புலவர் ம. பார்வதிநாதசிவம்

---

வலித்தூண்டல், கீரிமலை

## புனித அன்னம்மாள் இளைஞர் சனசமூக நிலையத்தின்
## வாழ்த்துச் செய்தி

மனித நேய அடிப்படையில் அயலவனில் அன்பு கூர்ந்து, மனித உரிமைகளை மதித்து, கடமைக்கும் அப்பாற்பட்டு, தன் குடும்பம் அசுகியானமையையும், ஊரடங்கு நேரத்தையும் பொருட்படுத்தாது, கடமை கண்ணியத்துடன், தனது கிராம மக்களின் தேவைகளையறிந்து காலந் தாழ்த்தாது சேவையாற்றிய திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் பெருமையடைகிறோம்.

அவர் சேவை நீடிக்கவும், வாழ்வு தழைத்தோங்கவும், இறைவன் அருள் பாலிக்க வேண்டுவதோடு, எமது நிலையச் சார்பிலும், ஊர்மக்கள் சார்பிலும் இதய பூர்வ நன்றியை நவில்கின்றோம்.

இ. தேவகுமார்
தலைவர்

செ. இருதயதாஸ்
செயலாளர்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர்

## திரு. சி. சிவமகாராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

ஒருவன் தன்னலமறுத்துப் பொதுநலம் பேணி வாழமுற்படும்போது, அவன் யோகியாகிறான் "ஊருக்குழைத்திடல் யோகம்" என்கிறான் பாரதி. புலனடக்கி யோகஞ்செய்து யோகியாக மாறுவது அனைவருக்கும் சாத்தியமாகும். ஒரு விடயமன்று. அதனாற்றான் பாரதி மனிதத்துவத்தை நேரிய பாதைக்கு இட்டுச்சென்று, ஒவ்வொரு மனிதனும் யோகியாக வழிகாட்டுகிறான்.

மக்கள் பணி மகேசன் பணி. ஒருமனிதன் எத்தொழிலை மேற்கொள்கின்றானோ அத்தொழில் மூலமாகவே இந்த அற்புதமான யோகத்தைச் சாதனைக்குக் கொண்டுவரமுடியும். எல்லாத் தொழிலும் இத்தகைய வாய்ப்பைத் தருமென்று சொல்வதற்கில்லை. சில தொழில்கள் மக்கள் பணிக்காகவே உருவாக்கப்பட்டவை கிராமசேவையாளர் தொழிலும் அத்தகையதொன்றே.

குடியேற்ற ஆட்சிக்காலத்தில் 'விதானையார்' என அழைக்கப்பட்ட இப் பதவி, நிலப் பிரபுத்துவ முறையின் மாற்று வடிவமாகவே காணப்பட்டது. ஏனெனில் அப்பதவியை வகித்தோர் சிலர் மக்கள் தொண்டாற்றும் மாண்புறு பதவியாக அதைக் கருதாமல் இருந்தனர். அதனாற்போலும் அப்பதவிப் பெயரையே 'கிராமசேவையாளர்' என மாற்றியதன்மூலம் மக்கள் பணியின் மகத்துவம் உணர்த்தப்படுகிறது.

மக்கள் பணியாற்றும் வாய்ப்பு எல்லோருக்கும் எளிதிற்கிடைக்காது கிராம சேவையாளர்களுக்கு இவ்வாய்ப்புக் கிடைத்துள்ளமை அவர்கள் பெற்ற பேறாகும். திரு. வேலாயுதபிள்ளை அவர்கள் இத்தகைய சேவையாற்றும் வாய்ப்பினை பெற்றிருக்கின்றார்.

சிலருக்கு தொழிலாற் பெருமை கிட்டுகிறது; வேறுசிலரால் தொழில் பெருமையுறுகிறது. திரு வேலாயுதபிள்ளை அவர்களைப் பொறுத்தவரை 'கிராமசேவையாளர்' என்ற பதவி பெருமையுறுகிறது.

காட்சிக்கு எளியனை, கடுஞ்சொல்லன் அல்லனை மக்கள் தொண்டாற்றும் அவரைப் பாராட்டுபவர்களும் பெருமை பெறுவர்; அந்தவகையிலே இத்தகையதொரு சிறந்தசேவையாளனைப் பாராட்டுவதில் நான் பெருமையடைகிறேன்.

மக்கள் பணியாற்றுபவர்களை நாம் பாராட்டுவதால் அத்தகைய சேவையாளர்கள் பலரை மேலும் உருவாக்கிட முடியும் உண்மையில் பாராட்டுதற்குத் தகுதிபெற்ற மக்கள் சேவையாளன் திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்கள் நன்றே வாழ்ந்து நற்பணியாற்றிட மனமார வாழ்த்துகிறேன்.

சி. சிவமகாராசா
தலைவர்
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ( கிளை 8 )

மகளிர் பாவனையாளர் தகவற் கல்வித் திட்டத்தின் தலைவி

# திருமதி வேதநாயகி அப்புத்துரை அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இன்றைய பாராட்டுவிழாவை முன்னிட்டு வெளிவரும் இச்சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தெல்லிப்பழை வடமேற்கு கிராமசேவகர் திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்கள் இப்பிரிவில் கடமையாற்றிய பத்து வருட கால தன்னலமற்ற தன்னிகரில்லாச் சேவைகளைக் காண்கின்றேன்; பாராட்டுகிறேன். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் கடமை தவறுது புகழ் பல பரப்பி கிராமாதிபத்தியம் வாய்ந்து விளங்காநின்ற, சீலம் நிறைந்த திருமகனே! நீ வாழ்க!

இயற்கையறிவும் செயற்கையறிவும் நிரப்பி பல்வகை ஆற்றல்களும் பெற்று அல்லும் பகலும் பாடுபட்டு எமது பகுதிக்கு உழைத்து, நிர்வாக சாதுரியத்தோடும், நேர்மையோடும், சாதி, மத, பேதம் பாராட்டாப் பண்போடும், நடுநிலை நின்று வேண்டுவார் வேண்டுவன செய்து, அரச நிர்வாகத்துறையில் அல்லாது கல்வி, சமூக அபிவிருத்திப் பணிகளில் எம்மோடு ஒத்துழைத்து, வழிகாட்டியுமாய் விளங்கும் மாண்புடை மைந்தா, நீ வாழ்க!

சிறு வயதிலேயே சைவப்பற்றும், சமயானுஷ்டான சீலமுங்கொண்டு நெற்றியிற் திலகம் நித்தமும் திகழ்வதுபோல, மனத்தின் தூய்மை முகத்தில் விளங்க எம் மத்தியில் நுமது பதவியின் ஆதிபத்தியத்தை சிறப்பாய் நடாத்தி, நிஷ்கபடமான மனத்தினுலும், ஆடம்பரமற்ற தூய வாழ்வினுலும் பிறர் செய்யும் குற்றங்களை மனதிற் கொண்டு அவர்மீது வஞ்சம் சாதிக்காத பெருங்குணத்தினுலும் எவர் மனதையும் எளிதிற் கவர்ந்து ஒருவருக்கும் மனக்கஷ்டம் இல்லாதபடி அமைதியோடு கடமையாற்றி இன்று பாராட்டுக்குரியவராய்த் திகழும் செல்வா நீ, வாழ்க!

உன்னத லட்சியங்களை அடைவதற்காக காலப்போக்கில் உண்மைச்சார்பில் இருந்து விலகி அவற்றை அடைவதற்கு முயல்வோர் பலர். இதனுலேதான் காந்தியடிகள் "ஒரு இலட்சியத்தின் வெற்றி அதன் முடிபிலல்ல, அடையும் வழியிற்றுன் தங்கியிருக்கிறது" என்ற கோட்பாட்டைத் தன் தொண்டர்களிடம் வலியுறுத்திஞர். அவர் வழி நின்று பல் துறைகளிலும் நீங்கள் ஆற்றிவரும் பணிகள் பாராட்டுக்குரியன உன்னத இலட்சியங்கள் முழுமையான வெற்றிக்குரியன. எதிர்காலத்திலும் உங்கள் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகிறேன். தங்கள் மனைவி மக்கள் சிறப்புற்று வாழ எனது நல்வாழ்த்துக்கள்; உங்கள் பணி நீண்டு தொடர எனது ஆசிகள்!

இளவாலை வடக்கு,
இளவாலை

அ. வேதநாயகி

# சேவையும் சால்பும்

மட்டுவில் ஆ. நடராசா

கிராமசேவை அலுவலர் திரு. க. க. வேலாயுதபிள்ளை ஒரு அரசாங்க ஊழியர். அதனால் அவரைப்பற்றி எழுதும்போது அரசாங்க ஊழியரைப் பற்றியும் எழுதவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அரசாங்க அதிபரானாலும், அவர் குடிமகன் ஒருவனுக்கு எழுதுங் கடிதத்திற் கையொப்பமிடும்போது, அதன் இறுதியில் 'தங்கள் தாழ்மையான ஊழியன்' என்னுஞ் சொற்றொடரை எழுதி, அதன்கீழ்க் கையொப்பமிட வேண்டுமெனப் பணிக்கப்பட்ட காலமொன்றிருந்தது.

மக்களே அவர்கள் வாழும் நாட்டு மன்னர்கள் என்னும் மக்களாட்சி முறையின் மகத்தான தத்துவத்தையும், அரச ஊழியர் மக்களுக்குத் தமது சேவையை வழங்கி, அதன் விலையாக அவர்கள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து தமது சம்பளத்தைப் பெறுகிறார்கள் என்பதையும் இரு பகுதியினருக்கும் ஞாபகப்படுத்துவதற்காகத் 'தங்கள் தாழ்மையான ஊழியன்' என்னுஞ் சொற்றொடரின் கீழ்க் கையொப்பமிடும்படி அன்றைய அரசாங்க ஊழியர்களுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கலாம்.

இன்று அவ்வழக்கும் அவ்வழக்குணர்த்தும் பொருள் பற்றிய உணர்வும் ஒழிந்துவிட்டன. அதிகாரிகள் பலர் தாம் மக்கள்மீது அதிகாரஞ் செலுத்தும் உரிமை உடையவர்கள் என எண்ணுகிறார்கள். மக்களும் தாம் அதிகாரிகளுக்கு அடங்கி நடக்கவேண்டியவர்கள் என எண்ணும் அளவுக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள்.

சட்டவரம்புக் குட்பட்டுத் தமக்கொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்குரிய அதிகாரத்தைப் பெறுங்காரணத்தால் அதனைப் பெறுபவர் அதிகாரியென அழைக்கப்படுகிறாரே தவிர, குடிமகன் எவன்மீதும் அதிகாரம் செலுத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார் என்னுங் காரணத்தால் அதிகாரி என அழைக்கப்படுவோர் எவரும் மக்களாட்சி நடைபெறும் ஒரு நாட்டில் இருக்கமுடியாது.

நம் நாட்டிலோ அரச அலுவலகங்களிற் பணிபுரியும் அதிகாரிகளன்றி அடிமட்ட ஊழியர்வரை அனைவருமே மக்களை ஆட்டிப்படைக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அரச அலுவலகங்களுக்குச் செல்லும் மக்கள் ஒவ்வொருவரும், தமது கருமங்களைச் செய்விப்பதற்காக அங்கு படும்பாடு அவரவருக்குத்தான் தெரியும். அவற்றைத் தொகுத்தெழுதுவது இயலாத காரியம்.

இது தொடர்பான எமது சொந்த அனுபவங்களை எழுதினால் அது சிலருக்கு மனவருத்தத்தை அளிக்கும் எனக் கூறுவதைவிட, பலருக்குச் சினமூட்டும் எனக் கூறுவது மிகப் பொருத்தமானது.

ஒருவர் செய்த தவறை அவருக்கு எடுத்துரைக்கும்போது அதனால் மனம் வருந்துவோர் தம்மைத் தாமே திருத்துந் தகுதியுடையோர்.

ஒருவர் செய்த தவறை அவருக்குச் சுட்டிக் காட்டும்போது அதனாற் சினங்கொள்வோர் என்றுமே திருந்தமாட்டார்; அவர்களைத் திருத்தவும் முடியாது.

மேலே குறிப்பிடப்பட்ட இரு பிரிவினரில் இரண்டாம் பிரிவினரையே எமது அலுவலகங்களில் அதிகமாகக் காண்கிறோம்.

அதனாலேதான் அலுவலகங்களுக்குச் சென்று அலுவலர்களின் மேசைகளை மாத்திரம் பார்த்துவிட்டுத் திரும்புவோர் சிலரும், அலுவலரைத் தேடி அலுவலகத்தின் அயலிடங் களில் அலைந்து திரிவோர் சிலரும், அலுவலரை அலுவலகத்துக்கு வெளியே, அழைத்துச் செல்லவேண்டிய இடத்துக்கு அழைத்துச் செல்வோர் சிலரும், அலுவலருடைய அணுக் கத் தொண்டர்களை அணுகி, அவர்களுக்கூடாகத் தமது அலுவல்களைச் செய்விப்போர் சிலரும், அலுவலரை அவரது ஆசனத்தில் ஒருவராகவன்றி இருவராகக் காண்போர் சிலருமாக, அலுவலகங்களை நாடி ஒருமுறைக்குப் பதிலாகப் பலமுறை அலைந்து திரிய வேண்டிய நிலைக்கு எமது மக்கள் ஆளாக்கப்படுகிறார்கள்.

இத்தகையோரின் திருநாமங்களும் இடம்பெறும் அரசாங்க ஊழியர் பட்டியலிலே தான் திரு. வேலாயுதபிள்ளையின் பெயரும் இடம்பெறுகிறது. இருந்தபோதிலும் அவர் பாராட்டுப் பெறுகிறார். அவரைப் பாராட்டுவதற்கென ஒரு மலர் மலர்கிறது.

இத்தகையதொரு மலர், கிராமசேவை அலுவலர் ஒருவர் சேவையில் இருக்கும் போதே அவரைப் பாராட்டும் முதல் மலர்; மலரக் காரணம் என்ன!

திரு. வேலாயுதபிள்ளை, மக்களை மன்னர்களாக மதிக்காவிட்டாலும் அவர்களை மக்க ளாக மதிக்கிறார்.

மக்கள்மீது அதிகாரத்தைப் பிரயோகிப்பதல்ல, அவர்களுக்குச் சேவை செய்வதே தமது அலுவலென்பதை, திரு. வேலாயுதபிள்ளை உணர்கிறார்.

மக்கள் கூறுங் குறைகளை — அவை தம்மீது சுமத்தப்படுங் குற்றச்சாட்டுகளாக இருந் தாலுங்கூட — பொறுமையோடு கேட்கிறார்; கேட்டபின் சிந்திக்கிறார். மக்களது குறை களைப் போக்கவும் தம்மீது தவறிருந்தால் அவற்றைத் திருத்தவும் முயற்சிக்கிறார்.

அலுவலக நேரத்தில் அவரைக் காண்பதற்காக அவருடைய அலுவலகத்துக்குச் சென்று, அவரைக் காணாது திரும்புவோரில்லை. அலுவலக நேரமல்லா நேரத்திலும் அவரிடஞ் சென்று அவருடைய சேவையைப் பெறுவோர் உண்டு. அவருடைய வீடு ஒரு அடையாத வாயில் அலுவலகம்; வீதியிற் செல்லும் அவரது வாகனமும் அலுவலகமாக மாறுவதுண்டு.

ஒரு நாள், தெல்லிப்பளை வடமேற்கில் வாழும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலை நடைபெற்றபோது, அவருக்கு உதவும் பணியில் நானும் ஈடுபட்டிருந்தேன். ஒருவர் என்னிடம் வந்து தனக்குரிய நிவாரணம் வழங்கும் உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றார். பின்பு தன் உறவினர் ஒருவரின் செல்லப் பெயரை (வீட்டில் அழைக்கப்படும் பெயரை)ச் சொல்லி அவருக்குரிய பத்திரத்தையுந் தரும்படி கேட்டார். அப்பத்திரத்தைக் கொடுப் பதற்கு, அதற்குரியவரின் பதிவுசெய்யப்பட்ட பெயர் எனக்குத் தெரியவேண்டும். அதனால் அதற்குரியவரின் பதிவுசெய்யப்பட்ட பெயர் என்னவெனக் கேட்டேன். உறவினரின் உத்தரவுப் பத்திரத்தைக் கேட்டவரால், தமது உறவினரின் பெயரைக் கூற முடியவில்லை. அவர் விழித்தார். சிறிது நேரத்தால் அவ்விடத்துக்கு வந்தார் திரு. வேலாயுதபிள்ளை. அவர் நடந்த சம்பவத்தைக் கேட்டறிந்தார். செல்லப் பெயருக்குரியவரின் சொந்தப் பெயரைக் கூறினார். தம் உறவினரின் பெயரை அறியாதவருக்கு அவருடைய உத்தரவுப் பத்திரத்தையும் பெற்றுச் செல்ல முடிந்தது. இச்சம்பவம் தெல்லிப்பளை வடமேற்குக்கும் திரு. வேலாயுதபிள்ளைக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுவதற்குதவும் ஒரு உதா ரணமாகும்.

இவர், தேவையின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, தம்மிடம் சான்றிதழ் பெற வருவோருக்கு, தாமே உதவியரசாங்க அதிபரிடஞ் சென்று அதில் அவருடைய ஒப்பத்தை யும் பெற்றுக் கொண்டுவந்து கொடுத்த பல சந்தர்ப்பங்கள் உண்டு. இவ்விதமாகத் திரு. வேலாயுதபிள்ளை காலங் கருதிச் செய்த சேவைகள் பல. அவற்றை விரித்துரைக்கின் அது பாதகமாக அமைந்துவிடும்.

இத்தகைய சேவைகள் பல செய்த காரணத்தாற்றுன் மக்கள் அவருக்குப் பாராட்டு விழா எடுக்கிறார்கள் என்பது மாத்திரமன்றி, விழா எடுக்கப்படுவதற்கு இன்னெரு காரணமும் உண்டு.

நச்சுப் பாம்புக்கு நாள்தோறும் பால் வார்த்தாலும், அது தனக்குப் பாலூட்டியவனுக்கும் நஞ்சூட்டும். நாய்க்குக் கஞ்சி வார்த்தாலும் அது நன்றி பாராட்டும்.

மனிதரில் பாம்பனைய கீழ்மக்களும், நாயனைய நன்றிமறவாப் பண்புடைய மேன்மக்களும் இருக்கிறார்கள். கீழ்மக்களுக்கு எவ்வளவு சேவை செய்தாலும் அவர்கள் அதைப் போற்றார், தூற்றுவர். அவர்கள் தூற்றாமல் இருப்பார்களேயானால் அதுவே பெரிய காரியம். மேன்மக்களுக்குத் தினைத்துணை உதவி செய்யினும் அவர்கள் அதைப் பனையளவினதாகப் பாராட்டுவர்.

ஒருவர் செய்யும் உதவிக்குரிய பிரதிபலனை, உதவும் தொகையினால் அளவிட முடியாது, உதவியைப் பெறுபவரின் சால்பினாலேயே அளவிடமுடியும்.

> ''உதவி வரைத்தன்று உதவி உதவி
> செயப்பட்டார் சால்பின் வரைத்து'' என்பது குறள்.

திரு. வேலாயுதபிள்ளை செய்த சேவையின் பெருமையை அளப்பதற்கு, அதைப் பெற்றவர்களின் சான்றாண்மையே அளவு கருவி. அது இன்று பாராட்டு விழாவாக உருவெடுத்திருக்கிறது.

எனவே இவ்விழா வேலாயுதபிள்ளை அவர்களின் சேவையின் சிறப்பையும், விழா எடுப்போரின் சான்றாண்மையையும் பிரதிபலிக்கிறது எனலாம். ஆகவே இச்சந்தர்ப்பத்தில் வேலாயுதபிள்ளை அவர்களின் சேவை வாழ்க; திரு. வேலாயுதபிள்ளை வாழ்க; தெல்லிப்பளை வடமேற்கில் வாழும் மக்களுடைய சான்றாண்மை வாழ்க என வாழ்த்துகின்றேன்.

# தெல்லிப்பழை வடமேற்கு மூலவளங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெல்லிப்பழை வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவு உளது. (இலக்கம் - முன்பு 63, தற்போது 107) இது ஒரு தனியான ஊரோ கிராமமோ அல்ல. பல ஊர்களின் - குறிச்சிகளின் - பகுதிகளைக் கொண்ட ஒரு பிரிவு எனலே பொருந்தும். 1.87 சதுரமைல் (1150 ஏக்கர்) பரப்பளவைக் கொண்ட பிரதேசமாகும்.

வடக்கே பாக்குநீரிணைக்கடல் எல்லையையும், கிழக்கே கருகம்பனையின் ஒருபகுதியை உள்ளடக்கி - நகுலேஸ்வரம் அளவெட்டி வீதியையும், தெற்கே அளவெட்டியின் ஒரு பகுதியை உள்ளடக்கி அச்சுவேலி - மூளாய் வீதியையும், சிறுவிளானின் சிறுபகுதியையும், இளவாலையின் வடபகுதியையும் உள்ளடக்கி நில எல்லையையும், மேற்கே மாரீசன்கூடலின் ஒரு பகுதியை உள்ளடக்கிய மாதகலை எல்லையாகக் கொண்ட நிலப்பரப்பே தெல்லிப்பழை வடமேற்குப் பிரிவு ஆகும். இது நெய்தல் நிலமாய கடலும் கடல் சார்ந்த பகுதியையும், மருத நிலமாய வயலும் வயல் சார்ந்த பகுதியையும், இவ்விரு நிலங்களும் மயங்கும் நிலப்பகுதியையும் கொண்டது. செம்மண், நரைமண், மணல்மண் ஆயவற்றுடன் வெள்ளைச் சுண்ணக்கல், முருகைக்கல் ஆயவற்றைக் கொண்ட நிலவளமும், நன்னீர், உவர்நீர் செறிந்த நிலக்கீழ் நீர்வளத்தையும் கொண்டது. விவசாயம், மீன்பிடி எனும் இரு பெருந்தொழில்களைப் பெரும்பான்மையோரும் உத்தியோகம், தச்சுவேலை, மேசன் வேலை, பனந்தொழில் என்பவற்றுடன் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத அத்தனை சிறு தொழில்களையும் மற்றையோரும் செய்கின்றனர்.

இப்பிரிவுக்குரிய:-


தபால்விநியோகம் - இளவாலை உபதபால் நிலையம், காங்கேசன் தபால் நிலையம்

நகர்காவலர் (பொலீஸ்) பிரிவு - காங்கேசன்துறை

நீதித்துறைப் பிரிவு - மல்லாகம் ஆரம்ப நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| மின் விநியோகம் | — | காங்கேசன் மின்சார சபை, தெல்லிப்பழை அபிவிருத்திச் சபை உப அலுவலகம் |
| சந்தை | — | இளவாலை, பண்டத்தரிப்பு, சுன்னாகம். |
| வைத்தியசாலை | — | தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை |
| தேர்தல் தொகுதி | — | காங்கேசன்துறை இல. 081 |
| வாக்கெடுப்பு மாவட்டம் | — | இல. 17 தெல்லிப்பழை உப அலுவலக வட்டாரம் 1 |
| | | இல. 18 ,, ,, ,, 2 |
| யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகம் | - | தெல்லிப்பழை வட்டாரம் 1, 2 |
| வாழும் மக்கள் தொகை ஏறக்குறைய | — | 5100 |
| வாக்காளர் தொகை (1985) | — | 2275 |
| குடியிருப்பு வீடுகள் ஏறக்குறைய | — | 1000 |
| குடும்பங்கள் | — | 1270 |
| சைவக் குடும்பங்கள் | — | 700 |
| றோ. க. சமயக் குடும்பங்கள் | — | 570 |
| நிலப்பரப்பு ஏறக்குறைய | — | 1150 ஏக்கர் |

# தெல்லிப்பழை வடமேற்கு (107)



30 குறிச்சிகள் அல்லது சிற்றூர்களைத் தெல்லிப்பழை வடமேற்குப் பிரிவு தன்னுள் அடக்கியுள்ளது. பெரும்பாலும் சாதிய அடிப்படையிலே மக்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்த குறிச்சிகளாக இவை இருந்திருப்பதையும் தற்பொழுது காலத்துக்கேற்ற வகையில் மாற்றமடைந்து வருவதையும் காணக்கூடியதாயுள்ளது.

குறிச்சிகளாவன:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆனைவிழுந்தான் | — | கல்நிலம் |
| 2. | உயனை | — | பழ உற்பத்தி |
| 3. | பொல்வத்தை | — | பனைவளம் |
| 4. | சிறுவிளான் (ஒருபகுதி) | — | சிறுபயிர்' பழவகை |
| 5. | சென்ஜேம்ஸ் (ஒரு பகுதி) | — | பழ உற்பத்தி, வெற்றிலை |
| 6. | சோடக்கன் | — | வான்பயிர், தென்னை, பழமரம் |
| 7. | பத்தாவத்தை | — | ,, ,, ,, |
| 8. | காடிவளை | — | ,, ,, ,, |
| 9. | வேரவல் | | ,, ,, ,, |
| 10. | இந்தனை | — | பனைவளம் |
| 11. | நாதவலை | — | ,, |
| 12. | மயிலங்கூடல் | — | வெற்றிலை, பழவகை |
| 13. | கருகம்பனை (ஒருபகுதி) | — | ,, ,, |
| 14. | கூவில் | — | பனைவளம் |
| 15. | மாவிலங்காடு | — | பனைவளம் |
| 16. | வலித்தூண்டல் | — | கடல்வளம் |
| 17. | வசந்தகிராமம் | — | பனைவளம், சுயமுயற்சி வீடமைப்புத் [திட்டம் |
| 18. | சிங்கத்தின்காடு | — | ,, |
| 19. | சேந்தாங்குளம் | - | கடல்வளம் |
| 20. | காளியானை | — | உவர்நிலம் |
| 21. | சோழன்காடு | — | பனைவளம் |
| 22. | வாழ்வகம் | — | 1983 புதிய அகதிகள் குடியேற்றம் |
| 23. | மாரீசன்கூடல் (ஒருபகுதி) | — | பனைவளம் |
| 24. | சீந்திற்பந்தல் ,, | — | ,, |
| 25. | கோவிந்தபுலம் | — | வான்பயிர் |
| 26. | சென்.நீற்றுஸ் | — | ,, |
| 27. | சித்திரமேழி | — | ,, |
| 28. | கலட்டியவத்தை | — | ,, |
| 29. | நாவலடி | — | ,, |
| 30. | இளவாலை வடக்கு | — | ,, |

இங்கு மிகவசதி படைத்த நிலச்சுவாந்தார்கள் முதல் ஏழைகள் வரை வாழ்கிறார்கள். எனினும் சராசரி வாழ்க்கை வசதிகள் படைத்தோரே 60 நூற்றுவீதமானோர். இது பொதுவாக மகிழ்ச்சிகரமான மக்கள் வாழும் பகுதி எனலாம். 33 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், 32 கறுப்பு வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், 07 டெக்குகளும், அத்துடன் 13 குளிர்சாதனப் பெட்டிகளும் மக்களின் சொந்தப் பாவனையில் உள்ளன. ஒரு வீடியோ சென்ரரும் சேவை செய்கின்றது.

## விவசாயம் - நிலவளம்

இப்பிரிவில் வாழ்வோரில் பெருந்தொகையானோர் விவசாயத்தையே தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ளனர், 153 ஏக்கர் வயல் நிலம் உளது. பண்ட

வனே வயல், மட்டிவளே வயல், உச்சலே வயல், வட்டவெளி வயல் ஆகியவற்றில் கால போக நெற்செய்கையும் கோடையில் சிறுபயிர்களும் செய்யப்படுகின்றன.

160 ஏக்கர் மேட்டுநிலம் உள்ளது. இந்நிலத்தில் அண்ணளவாகப் பின்வரும் பயிர்கள் செய்யப்படுகின்றன.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வெங்காயம் | 80 | ஏக்கர் | மிளகாய் | 35 | ஏக்கர் | பாசிப்பயறு | 20 | ஏக்கர் |
| மரவள்ளி | 12 | ,, | குரக்கன் | 08 | ,, | தக்காளி | 02 | ,, |
| வெற்றிலே | 06 | ,, | தென்னே | 05 | ,, | திராட்சை | 04 | ,, |
| கமுகு | 02 | ,, | கறிமுருங்கை | 03 | ,, | மா | 02½ | ,, |
| பலா | 02 | ,, | வாழை | 02 | ,, | கொய்யா | 01½ | ,, |
| தோடை | 0½ | ,, | எலுமிச்சை | 0½ | ,, | | | |

வான்பயிர்கள் – பனே – 50 ஏக்கரிலும், புளி – 02 ஏக்கரிலும், வேம்பு – 02 ஏக்கரிலும் உள்ளன.

## நீர்வளம்

பயிர்ச் செய்கைக்கு நிலக்கீழ் நீரே இறைக்கப்படுகின்றது. ஏறக்குறைய 500 கிணறுகளும், 30 குழாய்க் கிணறுகளும், 10 துலாக் கிணறுகளும், பயன்படுத்தப்படுகின்றன. நீர் இறைப்பதற்கு 150 நீரிறை யந்திரங்களும், 90 நீரிறை மின்மோட்டர்களும், 03 மாட்டுச் சூத்திரங்களும் பயன்படுகின்றன.

மாரிகாலத்தில் பண்டவனேக் குளம், உச்சலேக் குளம், மட்டிவளேக் குளம் ஆகிய மூன்று குளங்களும், உச்சலே வாய்க்கால், பண்டவனே வாய்க்கால், சத்துருக்கன் வாய்க்கால் ஆகிய மூன்று வடிகால்களும், எட்டு மதகுகளும் நீர்வளம் தருகின்றன. மழை நீர் வடிந்து சேந்தாங்குளம் கடலில் ஐந்துகண் மதகு மூலம் சேர்கின்றது. இதனேத் தடுத்துத் தேக்கி நீர்வளம் பேணவேண்டியது இன்றியமையாததாகும்.

## விவசாய உபகரணம்

மாட்டுழவுக் கலப்பைகள் 170, பெரிய உழவு யந்திரங்கள் 02 சிறிய உழவு யந்திரங்கள் 03, ஒற்றை மாட்டுவண்டிகள் 05, இரட்டை மாட்டு வண்டிகள் 09, தெளிகருவிகள் 60, மண்வெட்டிகள் 450 பயன்படுத்தப்படுகின்றன.

## விலங்கு வேளாண்மை

பசுமாடுகள் 180, எருதுகள் 75, கன்றுகள் 70, மறி ஆடுகள் 220, கடாவுகள் 90, கோழிகள் 550, குஞ்சுகள் 600 அளவில் வளர்க்கப்படுகின்றன.

## கடல் வளம்

பாக்குநீரிணேக்கடல் வட எல்லேயாக இருப்பதால் வலித்தூண்டல் துறை, சேந்தாங்குளத் துறை ஆகியவை மீன்பிடித் துறைகளாகப் பயன்படுகின்றன. இங்கு வாழும் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியிலும் ஈடுபட்டுள்ளனர். 04 சம்மாட்டிமார் தொழில் புரிகின்றனர். விவசாயத்துக்கு அடுத்தபடியாக மீன்பிடித் தொழிலே அதிக வருமானம் தருகின்றது எனலாம். இங்கு ஏறக்குறைய 25 மீன்பிடி யந்திர வள்ளங்களும் 35 கட்டுமரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

## உத்தியோகமும் தொழிலும்

உதவி அரசாங்க அதிபர் 01, நீதிபதி 01, பொறியியலாளர்கள் 05, பட்டதாரிகள் 28, நில அளவையாளர்கள் 05, வங்கி உத்தியோகத்தர்கள் 06, பதிவுபெற்ற

வைத்தியர் 06, பத்திரிகை ஆசிரியர்கள் 02, கவிஞர்கள் 07, இங்கு உருவான குரவர்கள் 07, சங். சகோதரிகள் 13, ஆசிரியர்கள் 35, அதிபர்கள் 09, விவாகப்பதிவாளர் 01, ஒலியர் 01, மின் இணைப்பாளர் 02, கட்டிட ஒப்பந்தக்காரர் 02, பரதநாட்டியக் கலைஞர் 02, பொற்கொல்லர் 02, கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் 15, நாடகக் கலைஞர் 13, கால்நடை வைத்தியர் 02, மேசன்மார் 45, தச்சுவேலை செய்வோர் 15, ஓய்வூதியம் பெறுவோர் 26, சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுவோர் 05, அநாதை உதவிப்பணம் பெறுவோர் 60, பிளாஸ்ரிக் வேலைசெய்வோர் 01 உளர். பன்னவேலை, பனங்கட்டித் தொழில் முதலான குடிசைக் கைத்தொழில் பரவலாகச் செய்யப்படுகின்றது.

## தொழிற்சாலைகள்

| | | |
|---|---|---|
| மயூரா வெல்டிங் தொழிற்சாலை | — | சித்திரமேழிச் சந்தி |
| விநாயகர் மில் | — | நாவலடி |
| கள் அடைக்கும் தொழிற்சாலை | — | வசந்த கிராமம் |
| பனங்கட்டித் தொழிற்சாலை | — | வசந்த கிராமம் |

## அரச நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| கிராமசேவை அலுவலர் அலுவலகம் | — | இளவாலை வடக்கு |
| பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் அலுவலகம் | — | வேரவல் |
| தையல் பயிற்சி நிலையம் | — | ஆனைவிழுந்தான் |
| நெசவு நிலையம் | — | ஆனைவிழுந்தான் |

## விற்பனை நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ப. நோ. கூ. சங்கம் கிளை 08 | — | இளவாலை வடக்கு |
| 2. | ,, ,, 36 | — | வசந்த கிராமம் |
| 3. | ,, ,, 43 | — | சிந்திற்பந்தல் |
| 4. | ,, ,, 44 | — | மயிலங்கூடல் |
| 5. | லிங்கம் எலெக்றிக்கல்ஸ் | — | சித்திரமேழிச் சந்தி |
| 6. | ஜமுனு ஸ்ரோர்ஸ் | — | மாரீசன்கூடல் |
| 7. | அருளகம் ஸ்ரோர்ஸ் | — | சென். நீற்றுஸ் |
| 8. | தேநீர்ச்சாலை | — | நாவலடி |
| 9. | அப்புத்துரை வியாபார நிலையம் | — | சிறுவிளான் |
| 10. | விவசாயக் களஞ்சியம் | — | ,, |
| 11. | பான்ஸி ஹவுஸ் | — | ,, |
| 12. | சுப்பிரமணியம் கடை | — | ஆலடி |
| 13. | கந்தையா கடை | — | மயிலங்கூடல் |
| 14. | கள் விற்பனை நிலையங்கள் | — | வலித்தூண்டல். சேந்தாங்குளம், [சிந்திப்பந்தல் |
| 15. | செல்வரத்தினம் வியாபார நிலையம் | — | வசந்தபுரம் |
| 16. | தீபா ஸ்ரோர்ஸ் | — | சேந்தாங்குளம் |

இவற்றுடன் ஆங்காங்கு வீடுகளிலும் பல சிறு விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன.

## போக்குவரத்து வசதிகள்

இப்பகுதியினூடாக – பருத்தித்துறை பொன்னாலை வீதி, சண்டிலிப்பாய் – சேந்தாங்குளம் வீதி, நகுலேஸ்வரம் – அளவெட்டி வீதி, சித்திரமேழி – பன்னாலை வீதி, அச்சுவேலி – மூளாய் வீதி ஆகிய வீதிகள் செல்கின்றன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சண்டிலிப்பாய் கீரிமலை 788, யாழ். பண்டத்தரிப்பு கீரிமலை 787, யாழ். வட்டுக்கோட்டை

கீரிமலை 789, யாழ். பன்னாலை கீரிமலை 795, பருத்தித்துறை கீரிமலை இளவாலை 763, காரைநகர் தெல்லிப்பழை 740 ஆகிய இலக்கப் பஸ் வண்டிகளும் இப்பிரிவினூடாகச் சேவை செய்கின்றன.

ஏறக்குறைய 1500 சயிக்கிள்களும், 60 மோட்டார் சயிக்கிள்களும், 11 மோட்டார் கார்களும் சொந்தப் பாவனையில் உள்ளன.

### வைத்திய சுகாதார சேவைகள்

1. ஆரம்ப சுகாதார நிலையம் – இளவாலை வடக்கு, 2. ஆரம்ப சுகாதார நிலையம் – கருகம்பனை, 3. கணேஷ் கிளினிக் – மயிலங்கூடல், 4. றெக்ஸ் மெடிக்கல் கிளினிக் – ஆனை விழுந்தான், 5. யோகானந்த் கிளினிக் – வசந்தபுரம் – வலித்தூண்டல், 6. தாய் சேய் பராமரிப்பு நிலையம் – சேந்தாங்குளம், 7. உ. அந்தோனிப்பிள்ளை யோசேவ் செல்வராசா – மாரீசன்கூடல், 8. அருள்நாயகம் முறிவு, நோவு வைத்தியம் – பத்தாவத்தை, 9. கிருபைராசா முறிவு, நோவு வைத்தியம் – மயிலங்கூடல்.

### கல்விச் சேவைகள்

1. இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் 1 – 11 வகுப்புகள், 760 மாணவர்கள், 25 ஆசிரியர்கள், 2. வலித்தூண்டல் றோ. க. பாடசாலை 1 – 5 வகுப்புகள், 75 மாணவர்கள் - 3 ஆசிரியர்கள், 3. மாரீசன்கூடல் றோ. க. பாடசாலை 1 – 7 வகுப்புகள்.

### பாலர் கல்விச்சாலைகள்

1. மகளிர் கல்வித்திட்டப் பாலர் பாடசாலை – இளவாலை வடக்கு, 2. சர்வோதய பாலர் பாடசாலை – வசந்த கிராமம், 3. சேந்தாங்குளம் பங்குக்குரவரின் அமைப்பின்கீழ் பாலர் பாடசாலை, 4. கூவில் சிவானந்த ச. ச. நிலைய அமைப்பின்கீழ் – பாலர் பாடசாலை, 5. புனித ஊர்த்து அன்னை கல்வி நிலையம் – சீந்திற்பந்தல், 6. புனித கயித்தார் கி. அ. சங்கப் பாலர் பாடசாலை – மாரீசன்கூடல்.

### கல்வி நிலையங்கள்

1. வர்த்தகக் கல்வி நிலையம் – பத்தாவத்தை, 2. அன்னை வேளாங்கண்ணி கல்வி நிலையம் – மயிலங்கூடல்.

## தெல்லிப்பழை வடமேற்கிலுள்ள ஆலயங்கள்

#### அ. சைவாலயங்கள்

1. ஆனைவிழுந்தான் விக்னேஸ்வரர் ஆலயம் 2. மயிலங்கூடல் ஞான வைரவர் ஆலயம் 3. கருகம்பனை நாகராசராஜேஸ்வரி ஆலயம் 4 கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம் 5. கூவில் புதிய அண்ணமார் ஆலயம் 6. கூவில் பழைய அண்ணமார் ஆலயம் 7. வசந்தபுரம் முருகன் ஆலயம் 8. சிங்கத்தின்காடு கூட்டத்தார் ஆலயம் 9. நாதோலை முத்துமாரியம்மன் ஆலயம் 10. வேரவல் இலுப்பையடி ஞானவைரவர் ஆலயம் 11. சோடக்கன் புன்னையடி விநாயகர் ஆலயம் 12. சோடக்கன் பழவீட்டுப் பிள்ளையார் ஆலயம் 13. காடிவளை ஒல்லுடை ஞான வைரவர் ஆலயம் 14. பத்தாவத்தை மாவடி வைரவர் ஆலயம் 15. கலட்டியவத்தை நாவலடி வைரவர் ஆலயம் 16. பத்தாவத்தை நாச்சிமார் ஆலயம் 17. வயல்வெளி நாச்சிமார் ஆலயம் 18. சிறுவிளான் கிராமட்டி வைரவர் ஆலயம்

#### ஆ. கத்தோலிக்க ஆலயங்கள்

1. புனித அன்னம்மாள் கோவில் – வலித்தூண்டல், 2. புனித அந்தோனியார் கோவில் – சேந்தாங்குளம், 3. புனித ஆரோக்கியநாதர் கோவில் – சேந்தாங்குளம்,

4. அன்னை வேளாங்கண்ணி கோவில் - மயிலங்கூடல், 5. புனித பிலிப் நேரியார் ஆலயம் - பத்தாவத்தை, 6. புனித ஊர்து மாதா கோவில் - சீந்திப்பந்தல், 7. நீற்றம்மாள் கோவில், 8. கயித்தார் கோவில் - மாரீசன்கூடல்.

இ. கிறீஸ்தவ ஆலயம்

1. அப்போஸ்தலர் சபை - சேந்தாங்குளம்.

## தெல்லிப்பழை வடமேற்கிலுள்ள சமூக சேவை நிறுவனங்கள்

**சனசமூக நிலையங்கள்**

1. இளவாலை இந்து இளைஞர் ச. ச. நிலையம் - காடிவளை, இளவாலை.
2. கலைமகள் மன்ற ச. ச. நிலையம் - நாவலடி
3. புனித கயித்தார் ச. ச. நிலையம் - மாரீசன்கூடல்
4. பாரதி ச. ச. நிலையம் - வசந்தபுரம்
5. புனித அன்னம்மாள் இளைஞர் ச. ச. நிலையம் - வலித்தூண்டல்
6. சிவானந்த ச. ச. நிலையம் - கூவில்
7. சர்வோதய சிரமதான ச. ச. நிலையம் - வசந்தபுரம்
8. இளங்கதிர் இயக்க ச. ச. நிலையம் - இளவாலை வடக்கு

**ஐக்கிய நாணய சங்கம்**

1. தெல். வடமேற்கு ஐ. நா. சங்கம் - இளவாலை வடக்கு
1. வசந்தபுரம் ஐ. நா. சங்கம் - வசந்தகிராமம்

**கிராமாபிவிருத்திச் சங்கம்**

1. தெல். வடமேற்கு கிராமாபிவிருத்திச் சங்கம் - இளவாலை
2. பாரதி கி. அ. சங்கம் - வசந்தபுரம், இளவாலை.
3. புனித கயித்தார் கி. அ. சங்கம் - மாரீசன்கூடல், இளவாலை.
4. மாதர் கி. அ. சங்கம் - கூவில்

**மற்றும்**

1. தெல். வடமேற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம்
2. சேந்தாங்குளம் - சண்டிலிப்பாய் பஸ்ஸூபிரயாணிகள் சங்கம்
3. சர்வோதய மாதர் சங்கம் - வசந்தபுரம்
4. கருகம்பனை இந்து இளைஞர் சங்கம்
5. கிராமிய கடற்றொழில் அபிவிருத்தி அமைப்புகள் -
வலித்தூண்டல், சேந்தாங்குளம், நீற்றூஸ், மாரீசன்கூடல், சீந்திற்பந்தல்.

# முன்பென்றும் பாடாத கவி
# பாட்டொன்று பாடி
# வாழ்த்துகிருர்

1. எங்கேநாம் காண்பதெங்கள் கிராமசேவகரை யென்றெண்ணி
அங்கேநாம் காண்போமோ வென்றேங்கிச் செல்வோர்க்கெல்லாம்
அங்கங்கே யாய்நின்று வெய்யிலோ டொளியுநல்கும்
செங்கதிரோ னெனச்சேவைசெய் வேலாயுதபிள்ளை வாழி,!

2. கொடுமொழி பேசினுலுங் குளிர்முகங் காட்டும்பண்பால்
சுடுகதிர் வரவுகண்டும் மலர்கின்ற கமலமென்போம்
கடுந்துய ரோடுவந்து குறைமுறை யிடுவோர்தங்கள்
படுந்துயர் தீர்க்குமாற்ருற் பரிகாரிபோல்வாய் வாழி!

3. தங்கருமம் முடிப்பதற்காய்த் தகிடுதத்தம் செய்வோரைக் கண்டுசீறி
பொங்குகடல் அலையடங்க வருவோர்க்கு மீனுணவு நல்குமாபோல்
ஏங்குமனஞ் சிறந்தொளிர நகைத்தவர் தஞ்செயல் முடிக்கும்பண்பால்
ஓங்குபுகழ் வேலாயுதபிள்ளை நின்சீரென்றுஞ் சிறந்து வாழி!

மார்சன் கூடல், இளவாலை

# புனித கயித்தார் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்

# வாழ்த்துச் செய்தி

எமது பகுதியிற் பத்தாண்டு காலம் பணிபுரியும் திரு: க. க: வேலாயுதபிள்ளை, எம்மோடு மாத்திரமல்ல எவரோடும் மலர்முகம் காட்டி இன்மொழி பேசும் நல்லுளம் படைத்தவர், அவர் சிறந்த பண்பாளர், கருணைக்கடல், பொன்மனச் செம்மல்:

எமது பகுதி மக்களை ஊக்குவிப்பதன் மூலம், எமது சங்க எல்லைக்குள் உள்ள சிந்திப்பந்தல் கிராமத்தில் 1987-12-21ல் தெல்லிப்பழை ப: நோ: கூ. சங்கத்தின் 43 ஆம் இலக்கக் கிளை திறக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தவர். அவர் எமக்கு அளப்பிரிய சேவையாற்றி வருகிறார்:

தொடர்ந்து அவர் எமது பகுதியில் பல்லாண்டு பணி புரியவேண்டுமெனவும் உடல் உள உறுதியுடன் நீடுழி வாழவேண்டுமெனவும் எல்லாம்வல்ல இறைவனைச் வேண்டி எமது கிராம மக்கள்சார்பில் வாழ்த்துகிறோம்:

ச. செபஸ்தியாம்பிள்ளை
தலைவர்

பதிவெண் V. N. R. D. 64/9

---

# தெல்லிப்பளை ப. நோ. கூ. கிளை 43 (சீந்திப்பந்தல்)இன்

# வாழ்த்துச் செய்தி

'கூட்டுறவு நாட்டுயர்வு' எமது கிராமத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கக் கிளைதானும் இல்லாதிருந்தபோது எமக்கு ஒரு கூட்டுறவுக் கிளையை அமைத்துத் தந்த எம் கிராமசேவை அலுவலர் திரு. க. க. வேலாயுதபிள்ளை அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவரின் சேவைக்காலத்தில் அவரது சேவையைப் பாராட்டி, ஆசியுரை வழங்குவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

அவர் எம்முடனிருந்து எமக்கு வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே எமது விருப்பம் எமது விருப்பம் நிறைவேறுக; அவர் பணி தொடர்க; அவர் நீடூழி வாழ்க என வாழ்த்தி வணங்குகிறோம்.

சி. யக்கோமுத்து
தலைவர்

அ. யேசுதாஸன்
செயலாளர்

தெல்லிப்பழை வடமேற்கு - இளவாலை

## கிராம அபிவிருத்திச் சங்கத்தின்

# வாழ்த்துச் செய்தி

*சேவைக்கெனப் பிறந்து சேவையாலே உயர்ந்து
ஓயாமல் உறங்காமல் ஊருக்குழைக் கின்ற
தாயனைய வேலாயுத பிள்ளைத் தண்ணளியாய் !
நேயத்தின் இலக்கணமாய் நீடூழி வாழியவே !* 1

*அழகு தமிழினிலே அன்பான மொழிபேசி
பழகு மனைவரையும் பண்பாலே கனியவைத்து
பழமைக்கும் புதுமைக்கும் பாலமாம் தோற்றமுடன்
இளமைக்கும் முதுமைக்கும் இனிப்பான நண்பன் நீ.* 2

*தொல்லை துயரங்கள் தொடர வருவோர்க்கு
கல்லை இளகவைக்கும் கனிவான முகங்காட்டி
எல்லையிலா இன்னல்களும் இடும்பைகளும் நீக்கவழி
இல்லையே என்றதை இயன்றவரை நீக்குகின்றாய்.* 3

*செய்யுங் கடமையெலாம் தெய்வப் பணியாகி
வையம் உணர வாய்ப்பளித்தாய், உன்பணியில்
வெய்ய குணமறியாய், வெறுப்புமிழும் பேச்சறியாய்
உய்ய வழிகாட்டும் உத்தம குணமுடையாய் !* 4

*ஒன்றும் அறியாத அப்பாவி போலிருந்து
ஒவ்வொருவர் தேவையையும் 'உள்ளபடி உய்த்துணர்ந்து
அத்தேவை பூர்த்திசெய்து அனைவரையும் வியக்கவைக்கும்
ஒப்பற்ற உன்திறனை எப்படி நாம் புகழ !* 5

*ஊர்விட்டு ஊர்வந்து எம்மோடு இருக்கையிலே
ஆர்முந்தி என்றன்று ஆமிக்குப் பயந்துநாம்
ஊர்விட்டு ஒன்றாக ஓடுகையில் நீர்மட்டும்
தீரமுடன் நின்றீர் திரும்பிநாம் வரும்வரையும்.* 6

*கற்றவர் உன்னைக் கனம்பண்ணும் வகையிலே
பெற்ற பதவியினைப் பெருமைபெறச் செய்கின்றாய் !
தற்பெருமை சிறிதுமின்றித் தகுதியினால் உயர்கின்றாய்
விற்பன்னன் என்றுநாம் விதந்துரைக்க வைக்கின்றாய்.* 7

*அயர்வின்றி யுழைத்து ஆக்கவழி நின்று
துயரின்றித் தெல்லி வடமேற்குப் பகுதியினர்
உயரவழி வைத்தாய் உன்பணியிற் சிறந்து
உயர்வாய் ! உயர்வாய்! ஒப்பின்றி, நீ உயர்வாய் !*

சி. குமாரலிங்கம்
*செயலாளர்*

கி. நாகேஸ்வரன்
*தலைவர்*

உ
சிவமயம்

# மயிலங்கூடல் சைவ அபிவிருத்திச் சபையின்
# வாழ்த்துச் செய்தி

"நல்ல வேலா யுதபிள்ளை
நங்க டம்ப னருளினாற்
பல்கிப் பெருகி வாழ்ந்திடப்
பலருஞ் சேர்ந்து வேண்டுவம்."

கி. ஸ்ரீபிரியா
க. வசந்தினி
செயலாளர்

சி. சிவபரன்
தலைவர்

---

வசந்தபுரம் - இளவாலை
# பாரதி சனசமூக நிலையத்தின்
# வாழ்த்துச் செய்தி

கிராமசேவையாளர் திரு. க. க. வேலாயுதபிள்ளை இப்பகுதியில் வாழும் ஒவ்வொருவரையும் நன்கு அறிந்தவர்; மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுபவர்; எந்தநேரத்திலும் சந்திக்கக் கூடியவர்.

ஒரு அலுவலைச் செய்வதற்குக் கிராமசேவையாளரின் ஒப்புதல்தேவையென்றால், அதனைப்பெறுவதற்காக அவரைத் தேடியலைவதிலேயே முக்காற்பங்கு நேரத்தையும் போக்கவேண்டிய இக்காலத்தில், அவரது அலுவலகத்தில் உடனே சந்திக்கக்கூடிய ஒருவிதானையார் இருக்கிறாரென்றால், அவர் திரு. வேலாயுதபிள்ளையாகத்தான் இருக்கமுடியும்.

எமதுபகுதி மாதிரிக்கிராம அமைப்பு வேலைகளுக்கான அவரின்பங்களிப்பை எமது மக்கள் என்றுமே நினைவு கூருவர்.

1987 மே, யூன் மாதங்களிலும், ஒக்டோபர், நவம்பர் மாதங்களிலும் இராணுவக்கொடுமையால், தம் இருப்பிடங்களைவிட்டு அகதிகளாகச் சென்றமக்களுக்கு நிவாரணம் அளிக்க அவராற்றிய சேவையை எம்மால் என்றுமே மறக்க முடியாது.

மக்கள் இடம்பெயர்ந்து சென்றபின்னரும் இங்கிருந்து நிலைமையை அவதானித்து அதற்கேற்றவிதத்தில் சேவைசெய்தவர் எமது கிராமசேவையாளர். அவருடைய சேவைகள் இன்னும் பல்லாண்டு தொடர எமது மக்கள்சார்பில் வாழ்த்துகிறோம்.

அ. றொபேட்
செயலாளர்

சு. டொன்பொஸ்கோ
தலைவர்

வலித்தூண்டல், கீரிமலை

கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின்

# வாழ்த்துச் செய்தி

மக்கள் சேவை மகேசன் சேவை என்பதனை சிரமேற்கொண்டு
தன்பணியும் மக்கள்பணி என்பதையே கருத்திருத்தி
ஏற்றத் தாழ்வு எதுவுமின்றித் தேவை நோக்கிச்
சேவை செய்யும் செம்மலவர் தனிச்சிறப்புக்
காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும்
நாமுமதைப் பெற்றதெங்கள் பாக்கியமே
ஐந்தாண்டுக் காலமாய் அஞ்சியஞ்சி
ஆருமற்ற அகதிகளாய் அலைந்த மக்கள்
ஊட்டமின்றி வாடாது உணவுபெற
ஏற்புடைய வழிவகுத்துச் சிரமமின்றி
வழங்கு பேமிற்றேடு பொருள் உடன்பெற்றேகத்
தனது துயர் பாராது பணி புரிந்தார்
பத்தாண்டு நிறைவு பெறும் அவர் சேவை
பாரதனில் தழைத்தோங்கி வாழ்வு பெறப்
பரமனடி போற்றி எங்கள் வாழ்த்தினையும்
திரு. கே. கே. வேலாயுதபிள்ளையவற் கர்ப்பணித்தோம்.

அ. மே. யோசேப்பு
தலைவர்

இ. தேவகுமார்
செயலாளர்

---

மாரீசன்கூடல் - இளவாலை

புனித கயித்தார் சனசமூக நிலையத்தின்

# வாழ்த்துச் செய்தி

கிராமசேவை அலுவலர் திரு. க க வேலாயுதபிள்ளை அவர்களின் சேவையைப்பாராட்டி ஆசியுரை வழங்குவதில் நாம் மகிழ்வடைகிறோம்.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற அண்ணாவின் தாரக மந்திரத்தின் அடிப்படையில் அவர் பணிபுரிகிறார் என்பதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது அகால வேளையிலும் அயராதுழைக்கும் அவர் எமதுபகுதிக் கிராமசேவையாளராகக் கடமையாற்றுவதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். தொடர்ந்தும் அவர் எமக்குச் சேவைசெய்ய இறையாசியை வேண்டி நல்லாசி கூறுகின்றோம்.

அன்ரனி அருள்தாஸ்
தலைவர்

பா. பஸ்ரின்
செயலாளர்

சேந்தாங்குளம், இளவாலை

## கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின்

# வாழ்த்துச் செய்தி

கிராமசேவகர் என்பது ஒரு பதவிப் பெயர்
கிராமத்துக்குச் சேவை செய்பவர் என்னும் பொருளில்
அது காரணப் பெயர்.
அதனால் கிராமசேவகர் திரு. க. க. வேலாயுதபிள்ளை கிராமசேவகர்.
எனவே அவரை,

வேலாயுதபிள்ளை யெனுஞ் சீரியோய்
இருபொருள் தரும் ஒரு சொற் குறிக்கும்
ஒருவ! நின்னை யாம் வாழ்த்துவம், எம்மூர்க்
கடற்கரை மணல் எண்ணிலும் பலநாள்
பணிபுரிந்து நீ வாழிய எனவே.

ம. பயஸ் லோகதாஸ்
செயலாளர்

ஏ. ஜே. அன்ரனி அன்பழகன்
தலைவர்

தெல்லிப்பழை வடமேற்கு, இளவாலை

## பிரசைகள் குழுவின்

# வாழ்த்துச் செய்தி

இரவென்னான் பகலென்னான் இன்றுபோய் நாளைவா வென்றுங் கூறான்
கரவில்லா மனமுள்ளான் கருணையொடு கடமையே கண்ணானான்
தரமான கிராமசேவை செய்வோர்க் கோருதாரணமு மானான்
உரமான நெஞ்சோடு அரிதான பணிபுரி வேலாயுதபிள்ளை வாழி.

மு. சிவராசரத்தினம்
தலைவர்

ஆ. நடராசா
செயலாளர்

இளவாலை வடக்கு
இளங்கதிர் சனசமூக நிலையத்தின்

# வாழ்த்துச் செய்தி

சேவையே பெரிதென சேவகம் புரிந்திடும், கிராம சேவகரே!
உம்மை நாம் பாராட்ட, வார்த்தைகள் தேடுகின்றோம்.
இளைஞர் எமது இதயத் துடிப்பினில், இடம் பிடித்திட்ட பிள்ளை அவர்களே!
பத்தாண்டு கால சேவைதனில், நீர் புரிந்திட்ட நன்மைதனைச் சொல்லிட
ஓர் விழா போதாது.
ஊக்கமதே நல்கிடும் உத்தமர்,
உண்மை வழிநின்று உழைப்பவர்களுக்கு — ஓர் உவமை.
பத்தாண்டு போல் பல்லாண்டு காலம், பாரினில் சேவை புரிந்திட
இளைஞர் இயக்கமாம் இளங்கதிர் நிலையத்தினர்
இதயபூர்வமாய் வாழ்த்துகின்றனர்.

பொ. இராசேந்திரம்
தலைவர்

செ. பத்திநாதர்
செயலாளர்

கூவில் சிவானந்த சனசமூக நிலையத்தினதும் மக்களினதும்

# வாழ்த்துச் செய்தி

இராணுவ நடவடிக்கை நடைபெற்றாலென்ன, ஊரடங்குச்சட்ட நேரமானாலென்ன, தன்னுயிரைத் துச்சமெனக் கருதி மக்களின் மனம் மகிழப் பணிபுரிபவர் எமது கிராமசேவை அலுவலர் திரு. க. க வேலாயுதபிள்ளை.

எந்த உதவியும் மற்றைய கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் வழங்கப்படமுன் எமக்கு வழங்கப்படுவதற்கு திரு க வேலாயுதபிள்ளையின் செயற்றிறமையே காரணம்.

தன்கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் கருத்தோடு சகலரையும் சமமாக மதித்து, அவரவர் தேவையறிந்துதவும் எமது கிராமசேவையாளரின் சேவையைப் பாராட்டுவதில் நாம் பெருமகிழ்வடைகிறோம் அவரை நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறோம்.

உ
சிவமயம்

காடிவளை, இளவாலை

## இந்து இளைஞர் சனசமூக நிலையம் வழங்கும்

## பாராட்டுப் பா

1. இல்லையென்னாமலே எவர்க்கும் உதவிடுமுன்
ஈரநெஞ்சங் கண்டோம்.

2. எத்தனை இடர்வரினும் இளைத்திடா, வேலாயுதபிள்ளை
வீரநெஞ்சங் கண்டோம்.

3. தொல்லை துயர்களெல்லாம் துச்சமெனக் களைந்து
வெல்லுமுன் திறங் கண்டோம்.

4. அல்லும் பகலிலும் நீ அடுக்கடுத்து முயன்று
ஆக்கம் தருதல் கண்டோம்.

5. கல்லும் கசிந்திடவே கருத்தினை எடுத்துரைக்கும்
கருணையுள்ளம் கண்டோம்.

6. சொல்லுக்குச் சொல்அழுத்தம் கொடுத்துச் செயல் முடிக்கும்
தூய நெஞ்சங் கண்டோம்.

7. மல்லுக்கு வந்தவரும் மகிமை மகுடியினால்
மடங்கிடும் மாண்பு கண்டோம்.

.8 ஒல்லும் வகையெல்லாம் உயர்ந்த பணிபுரியும்
உத்தம குணங் கண்டோம்.

செ. நாவரசன்
செயலாளர்

சு. மகேந்திரன்
தலைவர்

தெல்லிப்பழை வடமேற்கு, இளவாலை
சமாதான நீதிச்சபையின்
## வாழ்த்து

வீட்டுக்குட் சண்டை
எல்லை வேலிக்குச் சண்டை
எட்டிக்குப் போட்டிப் பேச்சிறைற் சண்டை
அதனை, கோட்டுக்குச் சென்று
பல்லில்லாப் பாட்டிக்குக் கொட்டினுன் பல்லென்று
நீதியை நிலைநாட்ட வழக்காடும் நீசர்க்கு
வட்டிக் கெடுத்துக் கொட்டிக் கொடுக்கின்ற
வரம்பற்ற செல்வத்தை எல்லாம்,
வீட்டுத் தேவைக்குச் செலவிட வழியொன்று வகுத்தான்
நீதிச்சபை ஒன்றை ஆக்கி
நான்கு நல்ல மனிதர்கள் முன்னே
வம்பு வழக்கிடுவோரை
வருகை தரும்படி செய்து,
நீதியை நிலை நாட்டி,
நாட்டிற் சாந்தி நிலவிட வழியொன்று செய்தான்
''அந்த விதானை வேலாயுதபிள்ளையைப் போற்ற
வானத்தை ஏடென எடுத்து
காலம் என்னும் எழுத்தாணி கொண்டு
எத்தனை நாட்கள் சென்றாலும்
எழுதி முடித்திடலாமோ?''
என்று கேட்போரும் எங்களில் உண்டு
எதனை எவன் முடிப்பான் என்றறிந்து
அதனை அவனுல் முடிப்பிக்கும்
ஆற்றல் உடையவன் அன்றோ!
இராணுவம் என்றதும் அஞ்சி
ஓடிய மக்களுக் கெல்லாம்
நிவாரணம் வழங்கிடும் வேலை, உன்போல்
சுடச்சுடச் செய்தவர் உண்டோ!
உன்பணி மறந்திடலாமோ?
உன்னை வாழ்த்துவம்! வாழ்த்துவம்! வாழ்த்துவம் நாமே.

க. செல்லத்துரை
செயலாளர்

செ. பத்திநாதர்
தலைவர்

உ
சிவமயம்

தெல். வடமேற்கு - கிராமசேவை அலுவலர்

# திரு. க. க.வேலாயுதபிள்ளை அவர்களின்

செயற்கருஞ் சேவையைப் பாராட்டி நிகழ்ந்த
நினைவுச் சின்னம் வழங்கல் விழாவில் உவந்தளித்த

# பாராட்டுப் பாமாலை

88 - 06 - 29

வெண்பா

சேவைக் கெனப்பிறந்து சேவையினு லேசிறந்து
சேவைக் கிலக்கணமே செய்தவனே—சேவைக்கோர்
வேலா யுதபிள்ளை வித்தகனே நும்புகழை
ஏலாதை யாவெம்மால் இயம்ப.

வருக

மல்லாகப் பதிபிறந்து தெல்லிநகர் தனிற்புகுந்து
தெல்வட மேற்கினிலே சேவையினு லேயுயர்ந்து
கல்வியறி வொழுக்கமொடு கருணைநிறை மதிநுட்பம்
வெல்லவருங் கீர்த்தியுயர் வள்ளலே நீ வருக,

உயர்க

பணிவுடமை இன்சொல்லு பண்பான வாழ்க்கைநெறி
துணிவுடைய செயற்பாடு தூய்மைநிறை சிந்தனைகள்
தணியாத செயலூக்கம் தன்மானப் பெருவாழ்வு
அணியாக வுடையதொரு அன்புருவே நீயுயர்க;

ஓங்குக

வாடுகின்ற பயிர்களுக்கு உயிர்கொடுக்கும் வான்மழைபோல்
தேடிவந்து நலிந்தோர்க்குச் சேவைசெய்து வாழ்வளிக்கும்
தேடரிய செம்மலே செயற்கரிய செய்பவனே
பீடுயரப் புகழ்நிலைக்கப் பெருவையுட னோங்குகவே;

விளங்குக

நோய்நாடி நோய்தீர்க்கும் நுண்மதிசேர் மருத்துவர்போல்
ஓயாமல் ஒவ்வொருவர் தேவைகளும் உய்த்துணர்ந்து
சேயாய் எமைப்புரந்து தினமும்ஊர் வலம்வந்து
தாயாக எமக்குதவும் தண்ணளியாய் விளங்குகவே;

பொலிக

இளவாலை மெய்கண்டான் ஏற்றம்மிகப். பெற்றுயர
அளவிலாப் பேருதவி அயராமற் செய்திடுவாய்
உளமார உதவுகின்ற உயர்வான குணக்குன்றே
வளமான வாழ்வுயர வான்முகிலாய் நீ பொலிக.

வெல்லுக

சந்தனமும் குங்குமமும் தவழ்நீற்றுத் திருநுதலும்
பொங்குமலர் முகப்பொலிவும் புகழார்ந்த குணநலனும்
தங்கமனத் தண்ணளிசேர் தருமநெறித் திருவுருவாம்
எங்களது அருமருந்தே என்றென்றும் வெல்லுகவே;

வாழிய

தொகையறிந்து வகைதெரிந்து தொழில்புரியும் துறைவல்லாய்
நகைமுகத்தால் பகைகடிந்து நல்லனவே புரிவோனே
முகையவிழும் மலர்முகத்தாய் முழுமனமும் குடிகொண்ட
தகையுடையாய் நின்சுற்றம் தழைத்தோங்கி வாழியவே;

சுபம்

குகன் அச்சகம் — தெல்லிப்பழை